பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**27 11 2025 THURSDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) இலங்கை அருகே உருவாகியுள்ள Ditwah புயல் வட தமிழகத்தை நோக்கி நகர்ந்து வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

2) தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் நாளை மிக கனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

3) ஜவுளி ஆராய்ச்சி கண்காணிப்பு மற்றும் புத்தொழில் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

4) மாற்றுத்திறனாளிகளுக்கு எதிராக தரக்குறைவாக பேசுவதை தடை செய்ய கடுமையான சட்டங்களை இயற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்றம், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

5) அஸ்லான்ஷா கோப்பைக்கான ஹாக்கி போட்டியில், இந்தியா - நியூஸிலாந்தை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>

**இலங்கை அருகே உருவாகியுள்ள Ditwah** புயல் வட தமிழகத்தை நோக்கி நகர்ந்து வருவதாக வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் திருமதி அமுதா தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னைக்கு 700 கிலோமீட்டர் தொலைவில் நிலை கொண்டுள்ள இந்த புயல் மணிக்கு 15 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருவதாக கூறினார்.

***(Voice Byte — அமுதா (1)— 27 Sec. )***

தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, நாகை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் நாளை மிக கனமழை பெய்யக்கூடும் என்று திருமதி அமுதா தெரிவித்தார்.

சென்னை, திருவள்ளுர், செங்கல்பட்டு, உள்ளிட்ட பத்து மாவட்டங்களில் நாளை மறுநாள் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் கூறினார்.

***(Voice Byte — அமுதா (2) — 28 Sec. )***

மணிக்கு 60 முதல் 80 கிலோமீட்டர் வேகத்தில் சூறாவளி காற்று வீசும் என்பதால், மீனவர்கள் அடுத்த ஐந்து நாட்களுக்கு கடலுக்கு செல்ல வேண்டாம் என்று திருமதி அமுதா கேட்டுக்கொண்டார்.

***(Voice Byte — அமுதா (3) — 27 Sec. )***

இதனிடையே, வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போது நிலவிவரும் வானிலை நிலவரம் குறித்து முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று கூறிய முதலமைச்சர், தேவையான மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அதிகாரிகளை உடனடியாக அனுப்பி வைத்திடவும், மீட்பு மற்றும் நிவாரண மையங்களை தயார் நிலையில் வைத்து மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை முறையாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

<<<<<<<>>>>>>

ஜவுளி ஆராய்ச்சி கண்காணிப்பு மற்றும் புத்தொழில் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த திட்டம் மூலம் நாட்டின் ஜவுளித்துறை மேம்படும் என்று கூறியுள்ளார்.

ஜவுளித்துறையில் உலகின் முன்னணி நாடாக மாறுவதற்கு, இத்திட்டத்தின் மூலம் புதிய ஆராய்ச்சி மற்றும் நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜவுளித்துறையில் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கும், திறன் மேம்பாட்டை உறுதி செய்யவும் புதிய ஆராய்ச்சிகளுக்கு வழிவகை செய்யவும் ஜவுளி ஆராய்ச்சி கண்காணிப்பு மற்றும் புத்தொழில் திட்டம் உதவிடும் என்று திரு கிரிராஜ் சிங் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

மாற்றுத்திறனாளிகளுக்கு எதிராக தரக்குறைவாக பேசுவதை தடை செய்ய கடுமையான சட்டங்களை இயற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்றம், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பான, மனுவை விசாரித்த தலைமை நீதிபதி திரு சூரியகாந்த், நீதிபதி திரு **Joymalya Bagchi** ஆகியோர் அடங்கிய அமர்வு, மாற்றுத்திறனாளிகளுக்கு எதிராக அவதூறாக பேசுவது சட்டரீதியான குற்றமாக கருதப்பட வேண்டும் என்று கூறியுள்ளது.

இதனிடையே, இதுதொடர்பாக, சட்டம் இயற்ற மத்திய அரசு நெறிமுறைகளை வகுத்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>

வாக்காளர்களுக்கு, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக வழங்கப்பட்ட கணக்கீட்டு படிவங்களை பூர்த்தி செய்து திரும்ப வழங்கினால் மட்டுமே, அவர்களின் பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் என்று சென்னை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான திரு ஜெ குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவை தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த்றதிக்கான கணக்கீட்டு படிவங்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் கடந்த நான்காம் தேதிமுதல் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பூர்த்தி செய்யப்பட்ட கண்க்கீட்டு படிவங்களை வாக்காளர்களிடமிருந்து பெறவில்லை என்றால் 1 9 1 3 என்ற உதவி எண்ணில் வாக்காளர்கள் தொடர்பு கொள்ளலாம் என்றும் திரு குமரகுருபரன் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

வாக்குரிமை, வாக்காளர்கள் மற்றும் தேர்தல்கள் ஜனநாயகத்தின் அடித்தளமாக உள்ளது என்று தமிழ்நாடு லோக் ஆயுக்தா உறுப்பினர் டாக்டர் வீ. ராமராஜ் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் லோக் ஆயுக்தா மற்றும் லோக்பால் குறித்த கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், ஜனநாயகத்தை வலுப்படுத்த ஊழலை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

வாக்காளர்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டால் அதை மீட்டுத்தரவும், இதுதொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வாக்காளர்கள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தேர்தல் ஆணையம், வாக்காளர் ஆணையம், தேர்தல் தீர்ப்பாயம் ஆகியவற்றை தேர்தல் நிறுவனங்கள் என அரசியலமைப்பில் வகைப்படுத்த வேண்டும் என்றும் திரு ராமராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசிய ஆயுஷ் குழுமத்தின்கீழ் அரசு மருத்துவமனைகளில் ஒப்பந்த அடிப்படையில் ஆலோசகர் மற்றும் மருத்துவமனை பணியாளர் காலி பணியிடங்களுக்கு

தகுதியுடையவர்கள் அடுத்த மாதம் 5-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

----------

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஆண்களுக்கான நவீன கருத்தடை சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு பிரதாப் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

அரியலூரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடர்பான விழிப்புணர்வை வாகனத்தை ஆட்சியர் திரு ரத்னசாமி கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

--------------------

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் திரு பிரவீன்குமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

------------------

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் இன்று நடைபெற்றது.

------------------

தேனி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் நாள்கூட்டம் நாளை நடைபெறும் என்று ஆட்சியர் திரு ரஞ்ஜித் சிங் தெரிவித்துள்ளார்.

-------------------

நாமக்கல் மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஆடு வளர்ப்பு பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

-----------------

**தென்காசி மாவட்டம் குற்றால அருவிகளில் கடந்த ஏழு நாட்களுக்கு பிறகு சுற்றுலாப்பயணிகள் குளிப்பதற்கு மாவட்ட நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது.**

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

அஸ்லான்ஷா கோப்பைக்கான ஹாக்கி போட்டியில், இந்தியா - நியூஸிலாந்தை வென்றது.

மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியில் **3-2** என்ற கோல் கணக்கில் இந்தியா வெற்றிபெற்றது.

இந்திய அணியின் **Amit Rohidas, Sanjay, Karthi Selvam** ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

-------------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தயாவின் அனிருத் சந்திரசேகர் — அமெரிக்காவின் **Reese Stalder** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-4, 6-4** என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Joshua Charlton** — டென்மார்க்கின் **Carl Overbeck** இணையை வென்றது.

-----------------

போபாலில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் பிரஜ்வால் தேவ், நிதின்குமார் சின்ஹா, **Digvijaypratap Singh, Rohan Mehra, Siddhant Banthia, Manish Sureshkumar, Udit Kamboj** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<<END>>>>>>**